மாகாண பொது நிர்வாக செயலகம், வட மாகாணம்
පළාත් රාජ්‍ය පරිපාලන කාර්යාලය, උතුරු පළාත
PROVINCIAL PUBLIC ADMINISTRATION SECRETARIAT,
NORTHERN PROVINCE

தொடர் இல:
යොමු අංකය:
Ref No:

எனது இல:
මගේ අංකය
My No: NP/02/18/GN/12

10.10.2012

மாகாணப் பொது நிர்வாக சுற்றறிக்கை: **NP/02/2012(03)**

சகல அமைச்சின் செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
வட மாகாணம்

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளை மாகாண இணைந்த சேவைகள் தொடர்பில் நடைமுறைப்படுத்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக, 1777/33 இலக்க 2012.09.26ம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது)

மேற்படி நடைமுறை விதிகளின் ஏற்பாடுகளை வட மாகாண இணைந்த சேவைப் பதவியணிகள் தொடர்பிலும் உடனடியாகச் செயற்படும் வண்ணம் பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவரேனும் ஒரு அலுவலர் 57 வயதின் மேல், கட்டாய ஓய்வு பெற வேண்டிய 60 வயது வரை சேவையில் இருக்க விரும்பும் சந்தர்ப்பத்தில் அவரது சேவை வரவு நடத்தை ஆகியவற்றில் திருப்தி காணுவதையும் தாபனவிதிக்கோவை மற்றும் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய உத்தியோகத்தர் உரிய காலத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய நியமனத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளமையில் திருப்தி காணுவதிலும் திணைக்களத் தலைவர் உறுதிப்பாட்டைக் கொண்டிருத்தல் அவசியம்.

எனினும் சேவை, வரவு, நடத்தை மற்றும் வினைத்திறமை என்பனவற்றில் பூரணத்துவம் கொண்டிராத ஆனால் 57 வயதின் மேல் சேவை நீடிப்பில் அலுவலர் இருக்க விரும்பும் சந்தர்ப்பத்தில், அது தொடர்பான அறிக்கையை நியமன அதிகாரியின் மேலதிக அறிவுறுத்தலைப் பெறும் பொருட்டு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ் ஏற்பாடுகள் தொடர்பாக தங்கள் அமைச்சு மற்றும் திணைக்களத்திலும் திணைக்களத்தின் கீழ் வரும் சகல அலுவலகங்களிலும் அறிவுறுத்தல்களை வழங்குவதுடன், சேவை நீடிப்புத் தொடர்பாக இந்நடைமுறை விதிகளுக்கமைய பின்பற்றிச் செயற்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*ஆர்.எஸ்.துரைராஜா*
பிரதிப் பிரதம செயலாளர்

ஒப்பம்: *ர.விஜயலட்சுமி*
பிரதம செயலாளர்

695, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

695, නාවලර් පාර
යාපනය, ශ්‍රී ලංකාව.

695, Navalar Road,
Jaffna, Sri Lanka.
E-mail ppas.np@gmail.com
Website : www.np.gov.lk

Gen Office : 021-2220960
Fax : 021-2220950
DCS : 021 3202571